## நோன்பு

நோன்பு என்பது ஒரு மிகப்பெரிய மகத்தான வணக்கமுறையாகும். இதன் மூலம் ஆத்ம ரீதியான மேம்பாடு மற்றும் உயர்வு ஏற்படுவதோடு உடலும் ஆரோக்கியமடைகிறது. நோன்பு மனத்தூய்மைக்காக அமுதம் போன்றது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

كُلُّ عَمَلِ ابْنِ آدَمَ لَهُ إِلَّا الصِّيَامَ، فَإِنَّهُ لِي وَأَنَا أَجْزِي بِهِ، وَالصِّيَامُ جُنَّةٌ، فَإِذَا كَانَ يَوْمُ صَوْمِ أَحَدِكُمْ، فَلَا يَرْفُثْ يَوْمَئِذٍ وَلَا يَسْخَبْ، فَإِنْ سَابَّهُ أَحَدٌ أَوْ قَاتَلَهُ، فَلْيَقُلْ: إِنِّي امْرُؤٌ صَائِمٌ وَالَّذِي نَفْسُ مُحَمَّدٍ بِيَدِهِ، لَخُلُوفُ فَمِ الصَّائِمِ أَطْيَبُ عِنْدَ اللهِ، يَوْمَ الْقِيَامَةِ، مِنْ رِيحِ الْمِسْكِ (متفق عليه)

பொருள்: *ஆதமுடைய மக்களுடைய ஒவ்வொரு செயலும் அவனுக்கே உரியது, நோன்பைத்தவிர. நோன்பு எனக்குரியது மற்றும் அதன்கூலியை நானே கொடுப்பேன். மேலும், நோன்பு ஒரு கேடயமாகும், ஆகவே, உங்களில் எவரும் நோன்பு நோற்றால் அவர்கள் மானக்கேடான பேச்சுக்களைச் பேசக் கூடாது, கூச்சல் குழப்பமும் மேற்கொள்ளக்கூடாது, மற்றவர் எவரும் உங்களை ஏசினாலோ அல்லது சண்டை சச்சரவு கொண்டாலோ நீங்கள் அவர்களிடம் கூறிவிடுங்கள், நான் நேன்பு மேற்கொண்டுள்ளேன். யாருடைய கையில் முஹம்மதுவின் ﷺ உயிர் இருக்கின்றதோ அவன்மீது சத்தியமாக, ஒரு நோன்பாளியுடைய வாயிலிருந்து வரும் நாற்றம் அல்லாஹ்விடத்தில் கஸ்தூரியைவிடப் பிரியமானது. ஒரு நோன்பாளிக்கு இரண்டு சந்ததேஷங்கள் உள்ளன, ஒன்று நேன்பு திறக்கும்போது, மற்றொன்று அவன் தன்னுடைய இரட்சகனை சந்திக்கும்போது. அவன் தன்னுடைய நோன்பிற்கான கூலியைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைவான்* (புக்ஹாரி. முஸ்லிம்)

www.uzairfalahi.com

ஒரு நோன்பாளியுடைய துஆ ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: *إِنَّ لِلصَّائِمِ عِنْدَ فِطْرِهِ دَعْوَةٌ لاَ تُرَدُّ* *நோன்பு திறக்கும் போது ஒரு நோன்பாளியின்துஆ நிராகரிக்கப்படுவதில்லை* (இப்னுமாஜா). நோன்பு மனிதர்களுடைய உடலையும் நோய்களிலிருந்து பாதுகாக்கின்றது இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ صَامَ يَوْماً فِيْ سَبِيْلِ اللهِ بَعَّدَ اللهُ وَجْهَهُ عَنِ النَّارِ سَبْعِيْنَ خَرِيْفاً

பொருள்: *எவர் அல்லாஹ்வுக்காக ஒரு நான் நோன்பு (குறிப்பாக போர் நடக்கும்போது) நோற்பாரோ, அவருடைய முகத்தை நரக நெருப்பிலிருந்து*

*அல்லாஹ் தஆலா 70 க்ஹரீஃப் (210 மைல்) வரை தூரமாக ஆக்கிவிடுகின்றான்* (புக்ஹாரி, முஸ்லிம், திர்மிதி, நசாயி).

**நோன்பு மறுமைநாளில் நோன்பாளிக்காக பரிந்துரைக்கும்**

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

الصِّيَامُ وَالْقُرْآنُ يَشْفَعَانِ لِلْعَبْدِ يَوْمَ الْقِيَامَةِ، يَقُولُ الصِّيَامُ: أَيْ رَبِّ، مَنَعْتُهُ الطَّعَامَ وَالشَّهَوَاتِ بِالنَّهَارِ، فَشَفِّعْنِي فِيهِ، وَيَقُولُ الْقُرْآنُ: مَنَعْتُهُ النَّوْمَ بِاللَّيْلِ، فَشَفِّعْنِي فِيهِ ، قَالَ: فَيُشَفَّعَانِ

பொருள்: *நோன்பு மற்றும் திருக்ஃகுர்ஆன் ஒரு அடியானுக்காக மறுமை நாளன்று பரிந்துரைக்கும். நோன்பு கூறும், என் இரட்சகனே, இந்த அடியான் என் காரணமாக உண்பதிலிருந்தும் எதையும் பருகுவதிலிருந்தும் மற்றும் தன்னுடைய இச்சைகளைப் பூர்த்தி செய்துகொள்வதிலிருந்தும் விலகி இருந்தான், என்னுடைய பரிந்துரையை அவனுக்காக ஏற்றுக்கொள்வாயாக. திருக்ஃகுர்ஆன் கூறும், என் இரட்சகனே, இந்த அடியான் என் காரணமாக இரவுகளில் தன்னுடைய தூக்கத்தையே தியாகம் செய்துள்ளான், என்னுடைய பரிந்துரையை அவனுக்காக ஏற்றுக்கொள்வாயாக. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், இவ்விதாமாக, இந்த இரண்டு அமல்களும் பரிந்துரை செய்யும்* (அஹ்மத், தபரானி, ஹாகிம்). மனிதர்களுடைய வாழ்க்கையில் நோன்பின் ஒரு முக்கியப் பலன் என்னவென்றால், நோன்பாளிகளிடையே எண்ணற்ற நற்பண்புகளும் குணங்களும் ஏற்பட்டுவிடுகின்றன. உதாரணமாக, அவன் பொறுமையாளனாக மாறிவிடுகிறான், மனத்தூய்மை, இறையச்சம், எச்சரிக்கையுடனும் பாதுகாப்புடனும் இருப்பது மற்றும் தற்கட்டுப்பாடு ஆகிய குணங்களைப் பேணுபவனாக ஆகிவிடுகிறான். தன்னுடைய உடலுறுப்புக்கள், வயிறு மற்றும் மர்ம ஸ்தானங்கள், இச்சைகளுக்கு அடிமையாவதிலிருந்து பாதுகாக்கப்படுகின்றான். அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ كُتِبَ عَلَيۡكُمُ ٱلصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى ٱلَّذِينَ مِن قَبۡلِكُمۡ لَعَلَّكُمۡ تَتَّقُونَ ١٨٣

பொருள்: *இறைநம்பிக்கையாளர்களே, உங்களுக்குமுன் இருந்த(நபிமார்களைப்பின்பற்றிய)வர்கள்மீது கடமையாக்கப்பட்டதுபோல் உங்கள்மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டிருக்கின்றது (அதன் மூலம்) நீங்கள் இறையச்சமுடையவர்களாய்த் திகழக்கூடும்* (அல் பஃகரஹ்:183).

நோன்பு, ஒரு மனிதனிடத்தில் கருணை, பாசம், அன்பு மற்றும் சமத்துவத்தின் உணர்வுகளை உருவாக்ககுகின்றது மற்றும் அவற்றை மேலும் மேலும்

மேன்மையடையச்செய்கின்றது. இதுபோன்றே, நோன்பு மனிதனிடத்தில் கட்டப்பாடு, அடிபணிதல் மற்றும் நேரான வழியினைப் பின்பற்றி நடப்பது ஆகிய பண்புகளையும் வேரூன்றச்செய்கின்றது, அவற்றை வளரவும் வழிவகுக்கின்றது.

## الصِّيَامُ நோன்பு என்பதன் பொருள்

அரபி மொழியில் இதன் பொருள் விலகி இருப்பது என்பதாகும், மார்க்கச் சட்டங்களின் அடிப்படையில், அல்லாஹ்வை வழிபடுவதாக நிய்யத்து செய்து அவனுக்காகவே உணவு உண்பதிலிருந்தும் எதையும் பருகுவதிலிருந்தும் மற்றும் தன்னுடைய இச்சைகளைப் பூர்த்தி செய்துகொள்வதிலிருந்தும் விலகி இருப்பது என்பது الصِّيَامُ அல்லது நோன்பு எனப்படும். இது காலைப்பொழுது விடிவதிலிருந்து சூரிய அஸ்தமம்வரை தொடர்ந்து கடைபிடிக்கப்படும்.

* * *

www.uzairfalahi.com